செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்


மடல்-67 ஜூலை, 2026

தோழர்கள் அனைவருக்கும் வங்கிகள் தேசியமய தின வாழ்த்துக்கள்

வங்கிகள் தேசியமயம் 57ஆம் ஆண்டு நிறைவு
தேசியமயத்தினைப் பேணிக் காத்திட உறுதி ஏற்போம்

19 ஜூலை, 2026 வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் ஐம்பத்தி ஏழாம் ஆண்டு நிறைவு நாளாகும். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஒப்பற்ற சாதனைகளின் உச்சம் 'வங்கிகள் தேசியமயம்' என்றால் அது மிகையன்று.

அன்றைய காலகட்டத்தில் இந்திய மக்களின் சேமிப்புகளை கையாண்ட வங்கிகள், பன்னெடுங்காலமாக தனியார் உரிமையாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. பிரிட்டிஷ் காலனித்துவச் சுரண்டலிலிருந்து இந்திய நாடு விடுபட்டு, சுயமான முன்னேற்றப் பாதையை அமைத்துக் கொண்டபோதும், வங்கிகள் மட்டும் தனியார் துறையிலேயே இருந்தன.



ஆனால், இத்தகைய தனியார் துறையினை தங்கள் சுய பயன்படுத்திக் கொண்டதோடு, வங்கி முதலாளிகள் வங்கித் இலாபங்களுக்கு மட்டுமே நாட்டின் வளர்ச்சியில் பங்கு கொள்ளத் தயாராக இல்லை.

எனவே, நாட்டிலுள்ள தனியார் வங்கிகளை தேசியமயமாக்கி, முதலாளிகள் வசமிருந்த அவற்றினை இந்திய அரசு கையகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அன்றே முன்னெடுத்தது. அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் இந்தக் கோரிக்கையை எழுப்பியபோது பல்வேறு தரப்பிலிருந்தும் இக்கோரிக்கை குறித்து வியப்பு தெரிவிக்கப்பட்டது.

வங்கிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சக்திவாய்ந்த தனியார் முதலாளிகளுக்கு எதிராக ஒரு தொழிற்சங்கம் இந்தக் கோரிக்கையை வென்றெடுக்க முடியுமா என்ற சந்தேகம் எழுந்தது.

ஆனால் தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவர்களான தோழர் பிரபாத்கர் மற்றும் தோழர் H L பர்வானா ஆகியோர் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இக்கோரிக்கையை எழுப்பியது மட்டுமல்லாமல், இதனை வலியுறுத்தி நாடெங்கிலும் பிரச்சாரங்களையும் இயக்கங்களையும் துவக்கினர்.

நலிவுற்ற வங்கிகளின் பொதுமக்கள் சேமிப்பு மற்றும் ஊழியர்களின் பணிப்பாதுகாப்பினை உறுதி செய்த அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த தோழர் பிரபாத்கர் அவர்கள் 1957 முதல் 1967 வரை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். நாடாளுமன்றத்தில் பலமுறை வங்கிகள் தேசியமயக் கோரிக்கையை வலியுறுத்தியும், விவாதங்களில் பங்கேற்றும் வங்கி ஊழியர்களின் இந்தக் கோரிக்கைக்கு அரசியல் ரீதியான ஆதரவைத் திரட்டினார்.



அக்காலகட்டத்தில், தனியார் உரிமையாளர்களின் தவறான நிர்வாகத்தால் பல சிறிய தனியார் வங்கிகள் வீழ்ச்சியடைந்த காரணத்தினால், அத்தகைய வங்கிகளில் டெபாசிட் செய்தவர்கள் தங்கள் பணத்தை இழந்ததோடு, ஊழியர்களும் வேலை இழந்தனர். இப்பிரச்சினையினை தோழர் பிரபாத்கர் பாராளுமன்றத்தில் திறம்பட வலியுறுத்தியதன் காரணமாக 1960ம் ஆண்டு டெபாசிட் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் (DICGCI) என்ற அமைப்பினைத் தொடங்க அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

பல்வேறு தனியார்துறை வங்கிகள், நிர்வாகச் சீர்கேடுகளால் திவாலானபோது, ரிசர்வ் வங்கி அவற்றின் உரிமத்தை இரத்து செய்து, அத்தகைய வங்கிகளை மூடுவதை வழக்கமான நடைமுறையாக வைத்திருந்தது.

இப்பிரச்சினையையும் தோழர் பிரபாத்கர் தனது திறமையான வாதங்கள் மூலம் நாடாளுமன்றத்தில் எழுப்பியதன் விளைவாக, வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் 45வது பிரிவு 1961ல் திருத்தப்பட்டது. இதன்மூலம், ரிசர்வ் வங்கி, திவாலான வங்கியை மற்றொரு வங்கியுடன் இணைக்க வழிவகை ஏற்பட்டு, வங்கிகள் மூடப்படுவது தடுக்கப்பட்டது.

வங்கி ஒழுங்குமுறை சட்டத்தின் இந்த முக்கியமான திருத்தத்தின் காரணமாக, மூடப்பட வேண்டிய 50-க்கும் மேற்பட்ட தனியார் வங்கிகள் வேறு வங்கியுடன், பெரும்பாலும் பொதுத்துறை வங்கிகளுடன் இணைக்கப்பட்டன. இதனால் மக்களின் சேமிப்பு பாதுகாக்கப்பட்டது. இந்த நடவடிக்கையானது பொது மக்களின் வங்கிச் சேமிப்பினை பாதுகாக்க அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மற்றொரு சிறந்த பங்களிப்பாகும்.

வங்கிகள் தேசியமயமே ஒரே தீர்வு-சாதித்த அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம்

1960ம் ஆண்டுகளில் இந்திய நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது, தனியார் வங்கிகள், குறிப்பாக கிராமப்புறங்களில், வங்கிக் கடன் மூலம் எளிய மக்களுக்குத் தேவையான நிதி உதவிகளை வழங்கத் தயாராக இல்லை என்பதை உற்று நோக்கிய அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம், 1964ம் ஆண்டு நடைபெற்ற திருவனந்தபுரம் தேசிய மாநாட்டில் "இனியும் தாமதிக்க வேண்டாம் - தனியார் துறை வங்கிகளை உடனடியாக தேசியமயமாக்க வேண்டும்" என்ற திடமான அறைகூவலை விடுத்தது.



அதனைத் தொடர்ந்து, தேசியமயக் கோரிக்கையினை வலியுறுத்தி நாடு முழுவதும் வங்கி ஊழியர்களின் வலிமை வாய்ந்த போராட்டம் தொடங்கப்பட்டது. அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இந்த அரசியல் கோரிக்கைக்கு வங்கி ஊழியர்கள் ஆர்வத்துடனும் மகத்தான பங்கேற்புடனும் ஆதரவளித்தனர். அதன் விளைவாக, அப்போதைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், டாடா, பிர்லா போன்ற சக்திவாய்ந்த பெரும் தனியார் முதலாளிகளுக்குச் சொந்தமான பெரிய தனியார் வங்கிகளை தேசியமயமாக்கும் துணிச்சலான முடிவை எடுத்தார்.

இந்திய நாடு விடுதலை பெற்ற பின்பு ஏற்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக, 1969 ஜூலை 19 அன்று, தனியார் வசமிருந்த வங்கிகளை தேசியமயமாக்கும் அவசரச் சட்டத்தை இந்திராகாந்தி அரசு வெளியிட்டது.

1970 பிப்ரவரியில், இந்தத் தீர்ப்பை எதிர்த்து தனியார் வங்கி முதலாளிகள் உச்ச நீதிமன்றத்தை அணுகி தடை பெற்றபோது, உடனடியாக உச்ச நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து வேலைநிறுத்தத்திற்கு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அழைப்பு விடுத்தது. அதன் காரணமாக, இருபத்துநான்கு மணி நேரத்திற்குள், வங்கிகளை மீண்டும் தேசியமயமாக்கும் அரசாணையை அப்போதைய ஒன்றிய அரசு வெளியிட்டது.

வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க நடவடிக்கையின் விளைவாக, இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கடந்த ஐம்பத்து ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக, பொதுத்துறை வங்கிகள் அளப்பரிய பங்களிப்பினை ஆற்றிவருகின்றன.

வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் பயனாக, இந்திய நாட்டின் கிராமப்புறங்களில் ஏராளமான வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டதோடு, அதன் விளைவாக, ஏழை மற்றும் சாதாரண மக்களின் சேமிப்பிற்கு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதுடன், அவர்களின் தேவைக்கேற்ப வங்கிக் கடனுதவி வழங்குதலும் விரிவாக்கப்பட்டது. வங்கிகள் தேசியமயமாக்கலுக்குப் பிறகு நாடெங்கிலும் ஆயிரக்கணக்கான வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டதன் விளைவாக இலட்சக்கணக்கான இளைஞர்கள் வங்கிகளில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

பொதுத்துறை வங்கிகளை தனியார்மயமாக்கும் முயற்சிகளை தடுத்திடுவோம்

வங்கிகள் தேசியமயத்தின் காரணமாக, வங்கிச் சேவைகள் அனைத்தும்,'மேல்தட்டு மக்களுக்கே' என்றிருந்த நிலைமை மாற்றப்பட்டு வங்கிச் சேவை 'அனைத்து மக்களுக்குமாகிய' உரிமையாக **(CLASS BANKING TO MASS BANKING)** விரிவடைந்தது. வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் நோக்கத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு பொதுத்துறை வங்கிகள் இன்னும் பல தொலைவு பயணிக்க வேண்டியுள்ள நிலைமையில், அடுத்தடுத்த ஒன்றிய அரசாங்கங்களின் கொள்கைகள் மற்றும் சட்டங்களினால் பெரும் அச்சுறத்தல்களுக்கு ஆளாகியுள்ளது.



ஒன்றிய அரசின் கொள்கைகள் நாட்டின் முன்னேற்றத்தினைக் கருத்தில் கொள்ளாது, பொதுத்துறை வங்கிகளை மென்மேலும் பலப்படுத்துவதற்கு மாறாக, அவற்றினை பலவீனப்படுத்தி, தனியாருக்குத் தாரை வார்க்கும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றன.

எனவே பொதுத்துறை வங்கிகளைப் பாதுகாப்பதும், தனியார்மயமாக்கும் முயற்சிகளை முறியடிக்க வேண்டியதும் நம் ஒவ்வொருவருடைய தலையாய கடமை ஆகும்.

தோழர்கள் அனைவரும் நம்முன் உள்ள தாக்குதல்களை உணர்ந்து, பொதுத்துறை வங்கிகளைக் காத்திட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் விடுக்கும் அனைத்துப் போராட்டப் பிரச்சார நடவடிக்கைகளிலும் பெருவாரியாக கலந்துகொண்டு ஐம்பத்தி ஏழாம் ஆண்டு வங்கிகள் தேசியமய நிறைவு தினத்தினை உணர்வுபூர்வமாக அனுசரிப்பதுடன், வங்கிகளைத் தனியார்மயமாக்குவதைத் தடுக்க அனைத்துப்பிரிவு மக்களையும் திரட்டி நம் பிரச்சாரத்தை தீவிரப்படுத்தி வங்கிகள் தேசியமயத்தினைக் காத்திட உறுதி ஏற்போம்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 30-வது மாநாடு மாபெரும் வெற்றி சம்மேளனத்தின் நிர்வாகிகள் அகில இந்தியப் பொறுப்புகளுக்கு தேர்வு



2026-ஆம் ஆண்டு ஏப்ரல் 19 முதல் 22 வரை பெங்களூரில் நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 30-வது மாநாடும், பின்னர் ஜூன் 10-அன்று நடத்தப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட பிரதிநிதிகள் கூட்டமும் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

இம்மாநாட்டில் ஜம்மு காஷ்மீர் மற்றும் தொலைதூர மாநிலங்களான நாகாலாந்து, அருணாச்சலப் பிரதேசம், மிசோரம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலிருந்தும் ஏராளமான பெண்களும் இளம் தோழர்களும் பிரதிநிதிகளாகவும், பார்வையாளர்களாகவும் ஆர்வமுடன் பங்கேற்று மாநாட்டினை பெரும் வெற்றிபெறச் செய்தனர்.



ஏராளமான பெண்களும் இளம் தோழர்களும் இம்மாநாட்டில் ஆர்வமுடன் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. ஏப்ரல் 19-ஆம் தேதி காலை முதல் 21-ஆம் தேதி மாலை வரை மாநாட்டு நிகழ்வுகள் அனைத்தும் சுமூகமாக நடைபெற்ற நிலையில், 22-ஆம் தேதி காலை முதல் ஒரு தரப்பு பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் குழப்பத்தை உருவாக்கியது மாநாட்டு நிகழ்வுகளை வெகுவாக பாதிப்பிற்கு உள்ளாக்கியது. அதன் காரணமாக, பிரதிநிதிகள் கூட்டம் அன்றைய தினம் ஒத்திவைக்கப்பட்டது.

இருப்பினும், ஒத்திவைக்கப்பட்ட பிரதிநிதிகள் கூட்டம் 2026, ஜூன் 10-அன்று பெங்களூரில் வெற்றிகரமாக நடைபெற்றது. அன்றைய தினம் பொதுச் செயலாளர் அறிக்கை மீது பிரதிநிதிகள் எழுப்பிய பல்வேறு கருத்துகளுக்கு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம் அவர்கள் பதிலுரை அளித்தார். அதனைத் தொடர்ந்து, பொதுச் செயலாளர் அறிக்கை பிரதிநிதிகளால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மத்தியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நாற்பது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறையை வாக்கெடுப்பு முறையில் நடத்த முடிவு செய்த நிலையில், அமைக்கப்பட்ட தேர்தல் ஆணையம் மிகவும் வெளிப்படையான மற்றும் ஜனநாயக ரீதியிலான முறையில் நிர்வாகிகள் தேர்வினை ரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்தியது.



மாநாட்டில் பங்கேற்ற **1028** பிரதிநிதிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப வாக்களித்து, வாக்குகள் முறையாக எண்ணப்பட்டபின் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நமது மாநிலத்திலிருந்து தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் துணைத் தலைவர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் பெருவாரியான வாக்குகள் பெற்று அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்.





தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் இணைச் செயலாளர் தோழர் **C R** குமரன் அவர்கள் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொருளாளராகவும், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் செயலாளர் தோழர் **R** கார்த்திக் அவர்கள் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் முக்கிய நிர்வாகிகளாக நமது சம்மேளனத்திலிருந்து தேர்வாகியுள்ள தோழர்களுக்கு பாராட்டுக் கூட்டம் **19-06-2026** அன்று சென்னை **A K** நாயக் பவனில் நடைபெற்றது.



கூட்டத்திற்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் தலைமை ஏற்றார். சம்மேளனத்தின் தலைவர்கள் தோழர் **A** சிதம்பரம், தோழர் **G** வைரப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அனைத்து வங்கிச் சங்கங்களைச் சார்ந்த பெரும் எண்ணிக்கையிலான தோழர்கள் பங்கேற்றதால் அரங்கம் நிரம்பி, பெரும் உற்சாகத்துடன் கூட்டம் நடைபெற்றது.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக மீண்டும் தேர்வு செய்யப்பட்ட



தோழர் **C H** வெங்கடாசலம், பொருளாளராக தேர்வு செய்யப்பட்ட தோழர் **C R** குமரன் மற்றும் இணைச் செயலாளராக தேர்வு செய்யப்பட்ட தோழர் **R** கார்த்திக் ஆகியோர் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்களால் பொன்னாடை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் தன்னுடைய உரையில், பெங்களூர் மாநாட்டு நிகழ்வுகள் மூலம் தொழிற்சங்க ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டு, உறுப்பினர்களின் ஒற்றுமை உறுதி செய்யப்பட்டது என்று கூறினார்.

எதிர்வரும் காலங்களில் வங்கித் துறை மற்றும் தொழிலாளர்கள் மீதான பல்வேறு தாக்குதல்களை எதிர்கொண்டு வென்றிட ஒன்றிணைந்த போராட்டங்கள் அவசியம் என்றும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் விடுத்திடும் போராட்ட அறைகூவல்களில் அனைத்து உறுப்பினர்களும் முழுமையாகப் பங்கேற்றிட வேண்டியதன் அவசியத்தினையும் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் வலியுறுத்தினார். தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பல்வேறு இணைப்புச் சங்கங்களின் சார்பாகவும் அகில இந்திய பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

யூகோ வங்கி ஊழியர் சங்கத்தின் தமிழ்நாடு மாநில மாநாடு - **13-06-2026**

யூகோ வங்கி ஊழியர் சங்கம் தமிழ்நாடு அமைப்பின் **47**-வது மாநில மாநாடு சென்னையில்



கடந்த **13-06-2026** அன்று சிறப்புற நடைபெற்றது. இம்மாநாட்டில் சுமார் **180** தோழர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் மாநாட்டினை துவக்கி வைத்து உரையாற்றினார்.

.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாச்சலம் அவர்கள் முக்கிய விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். யூகோ வங்கி ஊழியர் சங்கத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் பார்த்தா சந்தா, அகில இந்திய தலைவர் தோழர் ராம் அவதார் சர்மா மற்றும் யூகோ வங்கியின் மண்டல துணைப் பொது மேலாளர் திரு பிரவீன் குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



மாநாட்டின் இறுதியில் புதிய நிர்வாகிகள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்கத்தின் அவைத் தலைவராக தோழர் **K** விஜயன், தலைவராக தோழர் ஹரிஹரன், பொதுச் செயலாளராக தோழர் **L** முரளி, செயலாளராக தோழர் யுவராஜ் மற்றும் பொருளாளராக தோழர் ஆனந்தசெல்வன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.



புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட யூகோ வங்கி ஊழியர் சங்கத்தின் தமிழ்நாடு மாநில நிர்வாகிகளுக்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

13வது இருதரப்பு ஊதிய ஒப்பந்தக் கோரிக்கைகளை தயாரிக்க அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் குழு அமைப்பு



வங்கித் துறையில் இருதரப்பு ஒப்பந்த கூட்டு பேர முறை என்பது அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தனித்துவமான சாதனையாகும். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் இதுவரை **12** தொடர்ச்சியான இருதரப்பு ஒப்பந்தங்களை வென்றெடுத்துள்ளது. முதலாவது இருதரப்பு ஒப்பந்தம் **19-10-1966** அன்று கையெழுத்திடப்பட்டதன் **60** ஆண்டு நிறைவினை வங்கி ஊழியர்கள் அனுசரிக்கும் இவ்வாண்டில், **13**வது இருதரப்பு ஒப்பந்த கோரிக்கைகளை தயாரிக்கும் குழுவினை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அமைத்துள்ளது.

பணவீக்கம் மற்றும் கடுமையான விலைவாசி உயர்வை ஊழியர்கள் எதிர்கொள்ளும் தற்போதைய சூழ்நிலையில், கூட்டு பேர உரிமையை பாதுகாக்க வேண்டியதுடன், ஊழியர்களுக்கு போதுமான ஊதியம் கோருவது, ஒப்பந்த அடிப்படையிலான பணியமர்த்தல், அதிகாரிமயமாக்கல் போன்ற தாக்குதல்களுக்கு எதிராகவும், 13வது இருதரப்பு ஒப்பந்தக் கோரிக்கைகள் இறுதி செய்யப்படுவது அவசியமாகிறது

கடந்த 8-3-2024 அன்று கையெழுத்திடப்பட்டு, 1-11-2022 முதல் அமலில் உள்ள தற்போதைய 12வது இருதரப்பு ஒப்பந்தம் (12th BPS), 31-10-2027 அன்று முடிவடையவுள்ளது. வாரத்தில் 5 நாட்கள் வங்கிப் பணி (5 DAYS BANKING), செயல்திறன் சார்ந்த ஊக்கத்தொகை (PLI), ஓய்வூதிய மேம்பாடு (UPDATION OF PENSION) போன்ற நிலுவையிலுள்ள முக்கியமான பிரச்சினைகள் விரைவாகத் தீர்க்கப்பட வேண்டிய சூழலில், ஊதிய உயர்வு ஒப்பந்தப் பேச்சுவார்த்தை துவங்குவது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என்று அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

நமது கோரிக்கை சாசனத்தை இறுதி செய்வதற்காக, நமது இணைப்புச் சங்கங்களின் ஆலோசனைகளைப் பெற்று, பரிசீலித்து, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்திடம் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க 17 உறுப்பினர்களைக் கொண்ட துணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக AKBEFன் தலைவரும், பெடரல் வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான தோழர் சுஜித் ராஜு நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் இணைச் செயலாளர் தோழர் K கௌதம் அவர்களும் இக்குழுவின் உறுப்பினராக செயல்படுவார்.

நம் உறுப்பினர்கள் https://forms.gle/Gb6C5Uk7KenDiMHd7 என்ற இணைப்பு அல்லது QR குறியீட்டை பயன்படுத்தி தங்கள் பரிந்துரைகளை இணையம் வழியாக சமர்ப்பிக்கலாம். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மத்தியக் குழுவால், ஆலோசனைகள் பரிசீலிக்கப்பட்டு, புதிய கோரிக்கைகள் அடங்கிய சாசன வரைவு (DRAFT CHARTER OF DEMANDS) இறுதி செய்யப்படும். பின்னர், UFBU-வில் உள்ள பிற சங்கங்களுடனும் விவாதிக்கப்பட்டு, பொதுவான கோரிக்கைகள் அடங்கிய வரைவு சாசனம் IBA-விடம் சமர்ப்பிக்கப்படும்.



